**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT No.I, THANJAVUR.**

**C.C.No. 194 /2010**

**PROSECUTION WITNESS NO. 5**

| | | | |
|---|---|---|---|
| **Name** : | திரு. ஸ்டீபன் | **Caste** : | |
| **Father's/Husband Name** : | திரு. ராஜையா | **Religion** : | கிறிஸ்தவர் |
| **Village** : அஞ்சல், ஆனந்தபுரம் வழி, | நொச்சிக்குளம், செட்டிகுளம் | **Calling** : | மருந்தகம் |
| **Taluk** : | தூத்துக்குடி மாவட்டம் | **Age** : | **68 /2024** |

**(Accused 1 died. Accused 2 to 4 absent. Petition U/s. 317(1) CrPC filed and allowed.)**

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 29.02.2024**
**என்னால் சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது திருமதி எஸ். ஜெயந்தி, பெஞ்ச் கிளார்க் கிரேடு** 3, **திருமதி. ர.நித்யா**, தட்டச்சர்

**C.C.No. 194/2010 29.02.2024** **விசாரணை ஆரம்பிக்கும் நேரம்**: 4.33

## முதல் விசாரணை:

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் குடியிருந்து தூத்துக்குடி மாவட்டம், பேய்குளம் என்ற இடத்தில் மருந்தகம் நடத்தி வருகிறேன். அ.சா.1 ஜெயேஸ்குமார் என்கின்ற ராகேஷ்கிருஷ்ணா என்பவரை எனக்குத் தெரியாது. சுமார் 20 வருடங்களுக்கு முன்பாக பேய்குளத்திற்கு எனது மருந்தகத்திற்கு 1 ஆம் எதிரி துளசிதாசன் என்பவர் வந்திருந்தார். அவர் என்னை சந்தித்துஹோமியோபதி கூட்டுறவு சங்கத்தில் என்னை சேருமாறு கேட்டுக்கொண்டார். என்னிடம் விண்ணப்பபடிவம், புகைப்படம், பெற்றுக்கொண்டார். அந்த சங்கத்தில் சேருவதற்கு ரூ.250/- பணம் செலுத்தினேன். பின்னர் தஞ்சாவூரில் இது சம்மந்தமாக கூட்டம் நடப்பதாகவும், என்னைக்கலந்து கொள்ளுமாறு துளசிதாசன் கூறினார். நான் அதில் கலந்து கொள்ளவில்லை. பின்னர் 2, 3 முறை கடிதம் வந்தது. ஆனால் நான் கலந்து கொள்ளவில்லை. நான் மேற்கொண்டு பணம் எதுவும் செலுத்தவில்லை.

என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது. (**விண்ணப்பப்படிவத்தில் உள்ள கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.16 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது. **(கடிதத்தில் உள்ள கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.17 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) அதன் பின்னர் துளசிதாசன் இறந்துவிட்டதாகக்

கேள்விப்பட்டேன். நான் யாரிடமும் படிப்பதற்காக பணம் செலுத்தியதாக ஞாபகம் இல்லை. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது. சாட்சியை மாவட்ட குற்றப்பிரிவு காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் திருமதி.சித்ரா 1506 அவர்கள், நீதிமன்றத்தில் அடையாளம் காண்பித்தார்.**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை** :

கடந்த 1994 ஆம் ஆண்டு தஞ்சாவூர், ஹோமியோபதி மருத்துவர் கூட்டுறவு சங்கத்தில் துளசிதாசன் தலைவராக இருந்தார். நான் அதில் மெம்பராக சேர்ந்தேன் என்று சொன்னால் சரியல்ல. பின்னர் 2003 ஆம் ஆண்டு The Thanjavur, Electropathy Medical College ஒன்றை 1ஆம் எதிரி துவங்கினார் என்று சொன்னால் சரியல்ல. நான் அந்தக் கல்லூரியில் BEMS என்ற 4 ½ வருட படிப்பு படிக்கலாம் என்று விண்ப்பித்திருந்தேன் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி மருத்துவக்கல்லூரி சம்மந்தமாக செய்தித்தாளில் விளம்பரம் பார்த்தேன் என்று சொன்னால் சரியல்ல. அந்தமருத்துவக் கல்லூரியில் சென்னையை சேர்ந்த டாக்டர் தியாகராஜன்அவர்களால் நடத்தப்பட்டு வருவதாக தெரிந்து கொண்டேன் என்று சொன்னால் சரியல்ல. செய்தித்தாளைப் பார்த்து தஞ்சாவூருக்கு போன் செய்தபோது டாக்டர் நற்பவி என்பவர் பேசினார் என்று சொன்னால் சரியல்ல. அப்போது துளசிதாசன் வெளியூர் சென்றிருப்பதால் மருத்துவர் பேசியதாகக் கூறினார். பின்னர் 2003 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் தஞ்சாவூருக்கு வந்து துளசிதாசன் அவர்களை சந்தித்து ரூ.250/- செலுத்தி விண்ணபப்பப்படிவம் பெற்று BEMS படிப்பு படிக்க விருப்பம் தெரிவித்து விண்ணப்பம் செய்தேன் என்று சொன்னால் சரியல்ல. மேலும் நான் ஹோமியோபதி மருத்துவர் சங்கம் மெம்பர் என்பதால் மேற்படி படிப்புக்கான மருத்துத்தொகையில் முன்பணமாக ரூ.5000/- செலுத்தி வருவதாகவும், மாதந்தோறும் ரூ.1000/- செலுத்தி கடைசித் தவணையில் மீதமுள்ள முழுத்தொகையையும் செலுத்தி வருவதாகவும் கூறி எழுத்து மூலமாகக் கடிதம் ஒன்று கொடுத்தேன் என்று சொன்னால் சரியல்ல. துளசிதாசன் கடிதத்தை பெற்று ஒப்புக்கொண்டார் என்று சொன்னால் சரியல்ல. நான் செலுத்திய ரூ.5000/-த்திற்கு 1 ஆம் எதிரி எனக்கு ரசீது கொடுக்கவில்லை என்றும் மாதம் ஒருமுறை வகுப்பு நடத்தினார் என்றும் , வகுப்புக்கு ரூ.1000/- வீதம் 3 முறை பணம் செலுத்தினேன்

என்று சொன்னால் சரியல்ல. நான் செலுத்திய பணத்திற்கு துளசிதாசன் ரசீது தரவில்லை என்று போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்சமயம் எதிரிகளுக்கு பயந்து எதிரிகளுக்கு ஆதரவாகவும், அரசு தரப்பிற்கு எதிராகவும் பிறழ் சாட்சியாக மாறி சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

அ.சா.ஆ.17 ல் நான் கையெழுத்து செய்த ஆவணத்தில் என்ன எழுதியிருந்தது என்று எனக்குத் தெரியாது. என்னிடம் கையெழுத்து வாங்கிய விண்ணப்பத்தில் எனது புகைப்படம் ஒட்டப்படவில்லை என்றால் சரிதான்.

இத்துடன் குறுக்கு விசாரணை முழுமையாக நிறைவு பெற்றது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு. தட்டச்சு செய்யப்பட்டு. சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி கையெழுத்து செய்தார்.

நீதித்துறை நடுவர் எண்-I,
தஞ்சாவூர்.